செ.வெ.எண். 11/ஜனவரி தருமபுரி மாவட்டம் தேதி : 07.01.2017

**தருமபுரி மாவட்டம், பூமாண்டஅள்ளி மற்றும் கடத்தூர் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் ரூ. 21 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் விலையில்லா மடிக்கணினிகள் மாணவ, மாணவியர்களுக்கு மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் மற்றும் சுகாதாரம் குடும்ப நலத்துறை செயலாளர்/ தருமபுரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.**







தருமபுரி மாவட்டம், பூமாண்டஅள்ளி மற்றும் கடத்தூர் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் ரூ. 21 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் விலையில்லா மடிக்கணினிகள் மாணவ, மாணவியர்களுக்கு சுகாதாரம் குடும்ப நலத்துறை செயலாளர் / தருமபுரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கி பேசியதாவது :-

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாட்டில் மட்டும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கல்வித்துறைக்காக அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்து மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் மற்றும் மடிக்கணினி, இலவச பாடப்புத்தகங்கள், சீருடைகள், காலணிகள் என 14 வகையான பொருட்கள் வழங்கி வருகிறார்கள்.

தருமபுரி மாவட்டத்தில் 12-ம் வகுப்பு முடித்த மாணவ, மாணவியர்களுக்கு 90% பேர் கல்லூரியில் சேர்ந்துள்ளனர். மீதமுள்ள 10% பேரையும் ஒரு குழு அமைத்து அவர்களையும் கல்லூரியில் சேர்வதற்கு தேவையான உதவிகளை செய்து வருகிறது. தற்பொழுது தருமபுரி அரசு பாலிடெக்னிக் கல்லூரி 79 மாணவ, மாணவியர்களுக்கும் மற்றும் கடத்தூர் பாலிடெக்னிக் கல்லூரியில் 63 மாணவ, மாணவியர்களுக்கும் ஆக மொத்தம் 142 மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 21 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. இதனை மாணவ, மாணவிகள் பயன்படுத்தி தங்களுடைய திறமையை வளர்த்து கொண்டு வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தருமபுரி மற்றும் கடத்தூர் அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரி முதல்வர்கள் திரு. கா. மகாலிங்கம், திரு. அ. சௌந்தரராஜன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. இரா. சண்முசுந்தரம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---------------------------------------------------------------------------------------------------------------

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.